**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திருமதி. ஜெயந்தி |
| Father's Name/Husband Name: | திரு. முருகேசன் |
| Village : | கூத்தனூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 42 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி ஆஜர் ) எதிரி தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய கு.வி.மு.ச. பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு குற்ற பல்வகை மனு எண். 1028/2025 ஆனது 30.06.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

நானும் அ.சா.1 ம் ஒரு தெருவில் வசிக்கிறோம் என்றால் சரிதான். அ.சா.1 ம் நானும் நண்பர்கள் என்றால் சரியல்ல தங்கச்சி. வழக்கு பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது தங்கைக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.
Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு செல்லதுரை |
| Father's Name/Husband Name: | திரு. தங்கவேல் |
| Village : | கூத்தனூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 42 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி ஆஜர் ) எதிரி தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய கு.வி.மு.ச. பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு குற்ற பல்வகை மனு எண். 1028/2025 ஆனது 30.06.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றிய விவரம் என்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 02.08.2021 அன்று எனது மனைவியோடு பாடாலூர் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். புகார் மனுவை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் நான் எழுதிக்கொடுத்தேன். சாட்சி மறுபடியும் எஸ்ஐ பாஸ்கர் எழுதியாக கூறுகிறார். புகார் மனு எத்தனை பக்கம் எழுதப்பட்டது என்றால் 2 பக்கங்கள். புகார் மனுவில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் எனது மனைவி தான் கையொப்பமிட்டார். நான் போட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த புகார் மனுவில் சாட்சிகள் பெயர்கள் ஏதேனும் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் எழுதியுள்ளார்கள். எத்தனை சாட்சிகள் பெயர் குறிக்கப்பட்டுள்ளது என்றால் 4 பேர்கள். புகார் மனுவில் சாட்சிகளின் பெயர் எதுவுமில்லை என்றாலும் புகாரை நான் கூறியுள்ள போலிசார் எழுதவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு போலிசார் என்னை

விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் 02.08.2021. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னுடன் சேர்த்து வேறு யாரையாவது விசாரணை செய்தார்களா என்றால் எஸ் என் குமார், பிரேம்குமார், ஜெயந்தி ஆகியோர்களை விசாரித்தார்கள். எனது மனைவியை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது மனைவியை வேறு எங்கேனும் அழைத்துச் சென்றார்களா என்றால் இல்லை. எதிரி என் மேல் பாடாலூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து அதில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எதிரி மீது கொடுத்துள்ள புகார் அத்தனையும் பொய் என்றாலும், எதிரி மீது உள்ள கோபத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.
Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. புஷ்பராணி |
| Father's Name/Husband Name: | திரு. செல்லதுரை |
| Village : | கூத்தனூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 38 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.07.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி ஆஜர் ) எதிரி தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு குற்ற பல்வகை மனு எண். 1028/2025 ஆனது 30.06.2025 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நர்ஸிங் படித்துள்ளேன். எத்தனை குழந்தைகள் என்றால் எனக்கு ஒரு மகன், ஒரு மகள் என இரண்டு குழந்தைகள். பாடாலூர் காவல் நிலையத்தில் இருந்து எங்கள் ஊர் 7 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். பாடாலூர் ஆரம்பித்திலேயே காவல் நிலையம் இருக்கும். பாடாலூர் ஏரிக்கு தென்புறமாக காவல் நிலையம் உள்ளது. பாடாலூரில் இருந்து எங்கள் ஊருக்கு செல்ல வேண்டுமென்றால் காவல் நிலையத்திற்கு வடபுறமுள்ள தார் ரோடு வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். 100 நாட்கள் வேலைக்கு எத்தனை மணிக்கு செல்வார்கள் என்றால் 9 முதல் 10 மணிக்குள் செல்வார்கள். எங்கள் ஊரில் எங்களின் வார்டு எத்தனாவது வார்டு என்றால் 9 வது வார்டு. எங்களின் வார்டுக்கு எத்தனை நாள் வேலை என்றால் 70 நாட்கள். 70 நாட்கள் நான் வேலைக்கு சென்றேனா என்றால் சென்றேன். அந்த 70 நாட்களில் சம்பவம் எத்தனாவது நாள் நடந்தது என்றால் நான் வேலைக்கு சென்ற 3வது நாள் காலை 9.30 மணிக்கு சம்பவம் நடந்தது. அன்று யார் யார் வேலைக்கு

வந்தார்கள் என்ற வருகையை பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். அன்றைய நாள் நான் கையெப்பமிட்டேனா என்றால் வாரத்தில் ஒரு நாள் புதன் கிழமை மட்டும் தான் கையொப்பம் போடுவார்கள். அதனால் அன்றைய நாள் கையெப்பம் போடவில்லை. 100 நாள் வேலைக்கு செல்பவர்கள் தினமும் கையொப்பமிடுவார்கள் என்றாலும் நான் அன்றைக்கு வேலைக்கு செல்லவில்லை என்பதால் அன்று கையொப்பமிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாரஸ்ட் ரோட்டில் வண்டி திரும்பியுள்ளதாக சொல்லியுள்ளதாக என்ற நிலையில் அங்கு ஏதேனும் குறிப்பிட்ட அடையாளம் உள்ளதாக என்றால் அங்கு ஒரு பொது கிணறு உள்ளது. அந்த பொது கிணறு அருகில் தான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் பொது கிணறு பக்கத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனு யார் எழுதினார் என்றால் போலிசார் எழுதினார். போலிசாரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த 31.07.2021 அன்று நான் புகார் கொடுத்தேனா அல்லது என்றால் 02.08.2021 அன்று நான் புகார் கொடுத்தேனா என்றால் நான் சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தேன். போலிசார் தான் எனது வழக்கினை பதிவு செய்யாமல் வைத்திருந்தார்கள். சம்பவம் ஏதும் நடைபெறாமல் நான் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் எதிரி எனது சேலையை பிடித்து இழுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கும்போது எதிரி எனது கையை பிடித்து இழுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் கையை பிடித்து இழுத்து எனது சேலையை பிடித்து இழுத்து எனக்கு முத்தம் கொடு என்று சொல்லியுள்ளேன். எனக்கு வயது 38 அல்லது 40 என்றால் 38. எதிரிக்கு வயது என்ன என்றால் எனக்கு தெரியாது. எதிரியிடம் குடும்பத்திற்கும் எங்களின் குடும்பத்திற்கும் பழக்கம் இருக்கிறதா என்றால் சம்பவத்திற்கு முன்பு பேசிக்கொண்டு தான் இருந்தோம். அவர்கள் எனது சொந்தக்காரர்கள் தான். அவர் ஓட்டி வந்த வண்டியின் பெயர் என்ன என்றால் பெயர் தெரியாது ஆனால் இரு சக்கர வாகனம். அந்த 100 நாட்கள் ஒதுக்கப்பட்ட வேலை என்ன என்றால் ஏரி வேலை. நான் ஏரி வேலைக்கு நான் செல்வதற்கு முன்பு அங்கு எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை 80 அதற்கு குறைவான நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் நடந்ததை குறித்து அந்த 80 நபரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் எதிரியின் பாட்டியிடம் சொன்னேன். ஊரில் எனது

கணவருக்கு ஆள் பலம் இருக்கிறது என்றால் சரியல்ல. எனது கணவர் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து எதிரியின் வீட்டை உடைத்து எதிரியை அடித்ததாக எங்கள் மீது பாடாலூர் போலிசில் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். எனது கணவருக்கும் எதிரிக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக தான் என்னை வைத்து எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் அதனால் தான் முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.